மயிலாடுதுறை மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின்

செயல் முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு. தி. கார்த்திக்குமார்.

ந.க.அ1/ 988 /2023

நாள் :06.06.2024

பொருள் : பொதுப்பணி – நிலஅளவை பதிவேடுகள் துறை – தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்ட அலுவலகத்தில் புலஉதவியாளராக பணிபுரிந்து பணிக்காலத்தில் காலஞ்சென்ற ரா.சடையப்பபிள்ளை என்பவரின் வாரிசு – சதிஷ்குமார்(திரு.) ச. என்பவருக்கு மயிலாடுதுறை மாவட்டம் - நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்க அனுமதி வழங்கியது – பணிநியமனம் வழங்கப்பட்டது – இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. சென்னை-5, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கடித எண்.ந.க.ர1/9473/2023, நாள்.16.05.2023.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை நகஅ1 / 988 / 2023 நாள் : 26.06.2023
3. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ.1) துறை நாள்: 08.03.2023.
4. அரசுக்கடிதம் எண்.5532/G2/2023-1 மனிதவள மேலாண்மைத் (G2) துறை நாள்: 20.09.2023.
5. அரசுக்கடிதம் 1(டி) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி-9(2) பிரிவு, நாள்: 18.01.2024.
6. சென்னை, நிலஅளவை (ம) நிலவரித்திட்ட இயக்குநரகம், கூடுதல் இயக்குநரின் கடிதம் ந.க.ர1/ 19680 /2023 நாள்:03.02.2024.

*******

**ஆணை**

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் ஆணைகளின்படி, கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர் திரு. ச. சதிஷ்குமார் என்பவருக்கு, பார்வை 5-ல் காணும் அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு பார்வை 3 மற்றும் 4-ல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களை பின்பற்றி பணிவரன்முறை செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பார்வை 6-ல் காணும் சென்னை நிலஅளவை பதிவேடுகள் துறை, கூடுதல் இயக்குநரின் கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

-/ 2 /-

அதனை தொடர்ந்து, மேற்காணும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Order) தேவைப்படாத பணியாளர்களில் பணிநியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டும் / விதிகளை பரிசீலித்தும் அரசு கடிதம் மற்றும் ஆணையின்படி திரு. சு.சதிஷ்குமார் என்பவருக்கு இளநிலை உதவியாளர் இனத்தில் நபர் பணியில் சேர்ந்த நாளான 26-06-2023 முற்பகல் முதல் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண்பருவம் துவங்கும் (Commencement of Probation) எனவும் உத்தரவிடப்படுகிறது.

இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 26-06-2023 முற்பகல் முதல் தகுதிகாண்பருவம் 3 ஆண்டுகளுக்கு உட்பட்ட பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலத்தில் முடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உதவி இயக்குநர்,
நிலஅளவை பதிவேடுகள் துறை,
மயிலாடுதுறை.

6.6.24

06-06-2024

பெறுநர்: திரு. சு.சதிஷ்குமார்,
இளநிலை உதவியாளர் .
- (கண்காணிப்பாளர் - I - மூலமாக)

நகல்: இயக்குநர்,
நிலஅளவை (ம) நிலவரித்திட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5
- (பணிந்தனுப்பபடுகிறது.)

நகல்: மண்டல துணை இயக்குநர்,
நிலஅளவை பதிவேடுகள் துறை,
திருச்சிராப்பள்ளி.
- ( பணிந்தனுப்பபடுகிறது.)

நகல்: கண்காணிப்பாளர் – 1(ம) 2

நகல்: உபரி - 1